**கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டம் - 2019**

கொழும்பு பெரும்பாக கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2009 திசெம்பர் 18 ஆம் திகதிய 2557 மற்றும் 2558 எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் II ஆவது உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், உள்நாட்டு மற்றும் உள்ளக விவகார மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் கொழும்பு மாநகர சபை கொழும்பு மாநகர பகுதிக்குள் வேலைகளை அமுலாக்குவதற்காக பொறுப்பாகவுள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை கொலன்னாவை நகர சபை மற்றும் தெகிவளை/ கல்கிசை மாநகர சபை பகுதிக்குள் வேலைகளை அமுலாக்குவதற்காக பொறுப்பாகவுள்ளது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீதான என்னுடைய அவதானிப்புக்களை இந்த அறிக்கை கொண்டுள்ளது. கழிவு நீர் முகாமைத்துவ சேவைகள் ஊடாக கொழும்பு பெரும்பாகத்தில் நகர மற்றும் புறநகர்களில் வசிக்கின்றறோருக்கான நகர சுற்றாடல் மற்றும் பொது மக்கள் சுகாதாரத்தை முன்னேற்றுவதே செயயற்திட்டத்தின் நோக்கங்களாக உள்ளன. செயற்திட்ட பகுதிக்குள் ஏறத்தாழ 645,000 வசிக்கின்றவர்களிற்கு கழிவு நீர் முகாமைத்துவத்தினை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவாக உள்ளது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 13,410 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 116.60 மில்லியன் ஆக உள்ளது. செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ரூபா 1,731.70 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 12.60 மில்லியன் தொகை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளிற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 1,367.35 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 9.40 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் மிகுதித் தொகை ரூபா 364.35 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 3.20 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2009 திசெம்பர் 18 இல் தொடங்கியிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர், செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கல் திகதி 2017 மார்ச் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2019 திசெம்பர் 31 வரை தொடர்ந்திருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 02 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள

அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொடருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்கு ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச்

சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது | 72,190,356 | அரசாங்கத்திடம் இருந்து பெறப்பட்ட பங்களிப்பு குறைத்துக் கூறல் | அரசாங்க நிதிக்கு எதிராக பெறுமதி செர் வரி சரி செய்யப்படுவதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகபலமைப்புச் சபையின் கொள்கையாக உள்ளது. | பெறப்பட்ட மொத்த அரசாங்க பங்களிப்பு நிதிக்கூற்றுக்களில் புறம்பாக காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விசேட டொலர் கணக்கில் இருந்த மீதி நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை | 21,432,660 | காசு மற்றும் காசிற்கு சமமான மீதிகளின் குறைத்துக்கூறல் | ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு டொலர் கணக்கு மீதி திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | விசேட டொலர் கணக்கில் இருந்த மீதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வெண்டும். |
| (இ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போதான நேரடிக் கொடுப்பபனவுகளின் பெறுமதி ரூபா 95.87 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அறிக்கை பிரகாரம் இது ரூபா 97.90 மில்லியனாக இருந்தது. | 2,026,998 | நிதிக்கூற்றுக்களில் வெளிநாட்டு கைதவிர்ப்புக்களின் பெறுமதி குறைத்துக்கூறல். | வித்தியாசங்களிற்கான இணக்கக்கூற்று தயாரிக்கப்படுகின்றது. | கால ரீதியாக மீதிகளை இணக்கம் செய்யப்பட வெண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட ரூபா 1.52 மில்லியன் நடுவர் தீர்ப்பு செலவினற்களிற்கான கணக்காய்வுச் சான்றுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. மேலும், 2017 | 25,147,955 | கணக்காய்வின் நோக்கெல்லை வரையறுக்கப்படுதல். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட தொகைகளை மெய்மையாய்வு செய்வதற்கு ஆதாரமான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டம் பூர்த்தியாக்கப் பட்டிருந்த போதிலும் நடைமுறையல்லாத சொத்துக்கள் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் முறையே ரூபா 6.77 மில்லியன் மற்றும் ரூபா 16.84 மில்லியன் என்பன கையளிக்கப்பட்டதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 பௌதீக முன்னெற்றம்

| நடவடிக்கை | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சு |
|---|---|---|---|
| செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கியதிலிருந்து 10 ஆண்டுகள் கடந்த பின்னரும், ஐ.அ.டொலர் 9.40 மில்லியன் கடன் ஒதுக்கீட்டில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐ.அ.டொலர் 7.70 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டக் காலப்பகுதி பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் மிகுதி தொகை ஐ.அ.டொலர் 1.70 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு மீளளிக்கப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்தாத மீதி தீர்க்கப்படாமை | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கடன் மீதி தாமதமில்லாமல் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு மீளளிக்கப்பட வேண்டும். |

**3.2. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

| நடவடிக்கை | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சு |
| --- | --- | --- | --- |
| (அ) செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2017 திசெம்பர் 31 இல் முடிவுறுத்தப்பட்டிருந்த வேண்டிய போதிலும் செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகளின் குறைபாடு மதிப்பிட முடியவில்லை. | கருத்து தெரிக்கப்படவில்லை. | செயற்திட்ட பூர்த்தியாக்கல் அறிக்கை செயற்திட்ட காலப்பகுதி இறுதியில் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2016 யூன் 10 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்தவ கணக்காய்வு சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், மீளாயவாண்டின் போது செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப் பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் மீதான நலிவான கட்டுப்பாடு செயற்திட்ட செயலாற்றலை பாதகமாக பாதிக்கும். | கருத்து தெரிக்கப்படவில்லை. | உள்ளக் கணக்காய்வை அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |